இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழு

# இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழுவின் முன்னேற்றமும் எதிர்கொள்ளும் சவால்களும் தொடர்பான அறிக்கை

## 2017-2018

**2017 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 01 ஆம் திகதி முதல்
2018 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 30 ஆம் திகதி வரையான காலப்பகுதியில் இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழுவினால் முன்னெடுக்கப்பட்ட முதன்மை செயற்பாடுகள் தொடர்பான சுருக்கமான முன்மொழிவும், ஆணைக்குழுவின் பணிகளின் முன்னெடுப்பின் போது எதிர்கொள்ளும் சவால்களும் இவ்வறிக்கையினூடாக முன்வைக்கப்பட்டுள்ளது.**

# உள்ளடக்கம்


**A.** இலஞ்ச ஊழல் ஆணைக்குழுவின் பொறுப்புக்கள் 3

**B.** இலஞ்ச ஊழல் ஆணைக்குழு அடைந்த வெற்றிகள் 4

01. குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டோர் விபரம் 4
02. வழக்கிடுதல் 4
03. இலஞ்ச சுற்றிவளைப்புக்கள். 5
04. தரப்படுத்தல் 6
05. UNCAC கடப்பாடுகள் 6
06. UNOCD அங்கீகாரம் 7
07. தேசிய செயல் திட்டம். 7
08. திறந்த அரசுகளுக்கிடையிலான கூட்டு ஒப்பந்தம் 9
09. GSP + வரிச்சலுகை 9
10. நிபுணத்துவ புலனாய்வாளர்களின் ஆட்சேர்ப்பு 10
11. தடுப்பு உத்தியோகத்தர்களின் ஆட்சேர்ப்பு 10
12. சட்டத்தை திருத்தியமைத்தல் 11
    a. இலஞ்ச சட்டம்
    b. ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழு சட்டம்
    c. சொத்துக்கள் பொறுப்புக்கள் வெளிப்படுத்தல் சட்டம்
    d. இலஞ்சம் மற்றும் ஊழல் பற்றிய சார்த்துதல்களை புலனாய்வு செய்யும் ஆணைக்குழுச் சட்டம்.
13. தடுப்பு நிவாரணம். 13
14. தேசிய நேர்மைத்திறன் திட்டம் 14
15. கல்வி 15
16. பயிற்சி 15
17. இணையத்தளத்தை ஸ்தாபித்தல் 16

**C. சவால்கள்** 17

01. அலுவலக இடம் மற்றும் பிற வசதிகள் இல்லாமை 17
02. சட்ட, விசாரணை அலுவலர்களினது குறைந்த சம்பளம் 18
03. ஊழியர்களின் பற்றாக்குறை 19
04. பயிற்சிகள் மற்றும் சிறப்பு நிபுனத்துவ சேவைகளுக்கு போதிய நிதியொதுக்கப்படாமை 19
05. இலத்திரனியல் மற்றும் டிஜிட்டல் தொழில் நுட்பங்களைப் பயன்படுத்துவதற்கான வாய்ப்புக்கள் இன்மை. 20
06. பொதுமக்களின் சாதாரண நிலைப்பாடு 20

# A. இலஞ்ச ஊழல் ஆணைக்குழுவின் பொறுப்புக்கள்

இலஞ்ச ஊழல் ஆணைக்குழுவின் பணிகளானது பன்முகத்தன்மையுடையது. புலனாய்வினை மேற்கொள்ளல், வழக்கிடுதல் மற்றும் வழக்குகளை முன்னெடுத்தல் முதன்மையான பொறுப்புக்களாகும்.

அவ்வகையில் வெற்றிகரமான விசாரணைகளை முன்னெடுப்பதற்கு எதிர்காலத்தில் நிபுணத்துவ விசாரணையாளர்களை உள்ளீர்ததல், தடுப்பு நிவாரணப் பிரிவினை ஆரம்பித்தல், அரச நிறுவனங்களுக்கான தடுப்பு நிவாரண முறைமையை அறிமுகம் செய்தல், இலஞ்சம் மற்றும் ஊழல் தொடர்பில் மக்களிடத்தில் மனப்பாங்கு மாற்றத்தினை ஏற்படுத்தல், ஐக்கிய நாடுகள் தாபனம், ஐரோப்பிய ஒன்றியம் முதலானவற்றுக்கு தொடராக அறிக்கைகளை சமர்ப்பித்தல் முதலானவையும் உள்ளடங்கும்.

எங்களுடைய பிரதான இலக்கு, எவ்வாறாயினும் மக்கள் திருப்தியடையும் வகையில் நபரொருவரினை கைது செய்து வழக்கினை தாக்கல் செய்வதல்ல, மிகவும் வெற்றிகரமான முறையில் பூரண தகவல்களுடன் வழக்கொன்றை தாக்கல் செய்து சிறப்பான முறையில் வழக்கினை முன்னெடுப்பதாகும். 2017 மற்றும் 2018 ஆம் ஆண்டுகளில் முறையே 57 மற்றும் 59 பேர் குற்றவாளிகளாக குற்றத் தீர்ப்பளிக்கப்படும் வாய்ப்பு கிடைக்கப் பெற்றமை குறிப்பிடத்தக்கது.

## B. இலஞ்ச ஊழல் ஆணைக்குழுவின் வெற்றிகள்

இலஞ்சம் மற்றும் ஊழல் பற்றிய சார்த்துதல்களைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழுவிற்கு ஒப்படைக்கப்பட்டுள்ள பொறுப்புக்களை நிறைவேற்றும் வகையில் பல்வேறு செயற்பாடுகளை முன்னெடுத்து வருகின்றது. தனது பொறுப்புக்களை முன்னெடுத்த போது ஆணைக்குழு அடைந்த வெற்றிகள் ஏராளம்.

### 01. குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டோர் விபரம்

a. 2017 ஆம் ஆண்டில் நிறைவு செய்யப்பட்ட 89 வழக்கு விசாரணைகளில் குற்றத் தீர்ப்பளிக்கப்பட்டோர் எண்ணிக்கை மொத்தம் 57 ஆகும். இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழுவின் வரலாற்றில் பதிவு செய்யப்பட்ட அதிகளவான குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டோர் தொகை இதுவாகும்.

b. 2018 ஆம் வருடத்தில் இது வரையான காலப்பகுதியில் 59 பேர் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டுள்ளனர். இது ஆணைக்குழுவிற்கு கிடைத்த மிகப் பெரிய வெற்றியாகும்.

c. 2018 ஜனவரி 01 தொடக்கம் செப்டம்பர் 30 வரையான காலப்பகுதியில் நீதிமன்றங்களில் தாக்கல் செய்யப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை 35 ஆகும். அதில் அரசின் உயர்பதவிகளை வகிப்போரும் உள்ளடங்குவர். (இது தொடர்பான விபரம் இணைப்பாக தரப்பட்டுள்ளது)

d. எமது ஆணைக்குழுவினால் 2018 ஜனவரி 01 தொடக்கம் செப்டம்பர் 30 வரையான காலப்பகுதியில் நீதிவான் நீதிமன்றத்தில் 106 வழக்குகளும் மேல் நீதிமன்றத்தில் 227 வழக்குகளும் எல்லாமாக 333 வழக்குகள் விசாரணைக்குற்ப்பட்டு வருகின்றன.

### 02. வழக்கிடுதல்

இலஞ்சம் மற்றும் ஊழல் பற்றிய சார்த்துதல்களைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழுவிற்குள்ள பிரதான குற்றச்சாட்டாக விளங்குவது சாதாரண பதவிகளில் இருப்போரினை மாத்திரம் மையமாகக் கொண்டு வழக்கு நடவடிக்கையை தொடர்வதாகும்.

எவ்வாறாயினும் கடந்த இரண்டு வருடங்கள் தொடர்பில் பரீட்சிக்கும் போது முன்னாள் சட்டமா அதிபர், முன்னாள் மேன்முறையீட்டுநீதிமன்ற நீதிபதி, முன்னாள் அமைச்சர்கள் மூவர், அரசாங்க அச்சக கூட்டுத்தாபன தலைவர், இலங்கை ரூபவாஹினி கூட்டுத்தாபன பணிப்பாளர், லக்சல தலைவர், லக்சல முகாமைத்துவ பணிப்பாளர், லக்சல நிதிப்பணிப்பாளர், லக்சல செயற்றிட்ட

பணிப்பாளர், முன்னாள் மாவட்ட நீதிபதி, மின்சார சபை பிரதானி, அவன்கார்ட் தலைவர், இராணுவத்தின் முன்னாள் பிரிகேடியர், சுங்க அத்தியட்சகர், முன்னாள் நகரபிதா, முன்னாள் பிரதேச சபைதலைவர்கள் முதலான முன்னணி பதவிகளை வகிப்போருக்கு எதிராகவும் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

அவன்கார்ட் தலைவர், இராணுவத்தின் முன்னாள் பிரிகேடியருக்கு எதிராக இலஞ்சம் வழங்குதல், இலஞ்சம் பெற்றுக் கொள்ளல் முதலான குற்றங்களுக்கு குற்றப்பத்திரத்தை தாக்கல் செய்தமை முக்கிய திருப்பமாகும்.

## 03. இலஞ்ச சுற்றிவளைப்புக்கள்

a. 2017 ஆம் ஆண்டில், 57 வெற்றிகரமான சுற்றிவளைப்புக்கள் மேற்கொள்ளப்பட்டது.

b. 2018.10.10 ஆகும் போது இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழுவினால் மேற்கொள்ளப்பட்ட வெற்றிகரமான சுற்றிவளைப்புக்களின் எண்ணிக்கை 30 ஆக இருந்தது.

c. ஜனாதிபதி செயலணியின் பிரதானி மற்றும் அரசாங்க மரக்கூட்டுத்தாபன தலைவரையும் கைது செய்தமை மிகவும் முக்கியமானதோர் சுற்றிவளைப்பாகும். 1958 இல் இலஞ்ச திணைக்களத்தை ஸ்தாபித்த பின்னர் கைது செய்யப்பட்ட உயர்மட்ட அலுவலராக விளங்குபவர் ஜனாதிபதி செயலணியின் பிரதானியாவார். மற்றும் முன்னாள் ஏற்றுமதி, இறக்குமதி கட்டுப்பாட்டாளர், தேசிய கால்நடைகள் அபிவிருத்தி அதிகார சபைத்தலைவர், சிரேஷ்ட மதிப்பீட்டாளர்கள், மின்சார சபை பிரதானி, பொலிஸ் அத்தியட்சகர் முதலான பதவிகளையுடைய அலுவலர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

d. அவ்வகையில் பொதுவான நிலைப்பாட்டின் அடிப்படையில் சாதாரண பதவிகளிலுள்ளோர் மாத்திரமல்லாது உயர்பதவிகளை வகிப்போரையும் கைது செய்துள்ளமை மூலம் ஆணைக்குழுவின் சுயாதீனத்தன்மை பொதுமக்களுக்கு வெளிப்படையாகியுள்ளது. அதன் அடிப்படையில் எதிர்காலத்தில் ஆணைக்குழுவானது எப்பதவி வகிப்போராயினும் எவ்வித பாரபட்சமுமின்றி நடவடிக்கைகளை முன்னெடுப்பதற்கு அவசியமான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

## 04. தரப்படுத்தல்

a. Transparency International மூலம் வருடாந்தம் வெளிவிடப்படும் ஊழல் சுட்டி தொடர்பான வருடாந்த அறிக்கையின்படி, இலங்கையானது சர்வதேச ஊழல் எதிர்ப்பு சுட்டியில் 96 முதல் 91 வரை முன்னோக்கிப் பயணித்துள்ளது. அந்நிலையை அடைவதற்கு ஆணைக்குழு மேற்கொண்ட பிரயத்தனங்கள் ஏராளம். எவ்வாறாயினும் அடுத்த வருடத்தில் முன்னோக்கி நகர்வதற்கான இலக்குடன் மறுசீரமைப்புக்களை இதுவரைக்கும் இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களைப் புலனாய்வு செய்யும் ஆணைக்குழுவானது முன்னெடுத்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

## 05. UNCAC கடப்பாடுகள்

a. இலங்கை அரசானது ஐக்கிய நாடுகள் சபையின் ஊழலுக்கு எதிரான சமவாயத்தில் 2004 மார்ச் 15 ஆம் திகதி கைச்சாத்திட்டதுடன் 2004 மார்ச் மாதம் 31 ஆம் திகதி ஏற்றங்கீகரித்தமை குறிப்பிடத்தக்கது. அதனடிப்படையில் சமவாயத்தில் ஒப்புதல் அளித்தமைக்கு இணங்க இலங்கை அரசானது ஊழலுக்கு எதிராக போராடுவதற்கான போதிய பின்னணி மற்றும் அதற்கேற்றதான நிர்வாக நியதிகளை ஏற்படுத்துவது தொடர்பில் ஐக்கிய நாடுகள் சபையின் ஊழலுக்கு எதிரான சமவாயத்தின் பிரிவு 05(02) இன் கீழ் பிணைந்து நிற்கின்றது. ஐக்கிய நாடுகள் சபையின் ஊழலுக்கு எதிரான சமவாயத்தின் ஏற்பாடுகளை இலங்கையினுள் நடைமுறைப்படுத்தும் கேந்திர மையமாக இலஞ்ச ஊழல் ஆணைக்குழுவே விளங்குகின்றது.

b. ஐக்கிய நாடுகள் சபையின் ஊழலுக்கு எதிரான சமவாயத்தில் நியதிகளின் நடைமுறைப்படுத்துகை தொடர்பில் காலத்துக்காலம் சர்வதேச நிறுவனங்களுக்கு பதிலளிப்புக்களையும் பொறுப்புக் கூறலையும் ஆணைக்குழு வழங்கிவருகின்றமை.

c. UNCAC ஊழலுக்கு எதிரான சர்வதேச சமவாயத்தின் அரச நிர்வாகத்தின் கீழ் இலங்கைக்கு முதல் கலந்துரையாடல் மீளாய்வை நிறைவேற்ற முடிந்தது. ஐ.நா. ஊழலுக்கு எதிரான சர்வதேச சமவாயத்தின் 3 வது (குற்றவியல் நடைமுறை) மற்றும் 4 வது (சர்வதேச ஒருங்கிணைப்பு) முதலான அத்தியாயங்கள் இதனுடன் தொடர்புடையது.

d. இரண்டாவது கலந்துரையாடல் மீளாய்வானது 2வது அத்தியாயமான (நிவாரணம்) மற்றும் 5 வது அத்தியாயமான (சொத்து மீட்பு) முதலானவற்றை பூரணப்படுத்துவதற்கு இலங்கைக்கு சந்தர்ப்பம் கிட்டியது.

e. 2018 ஜூன் முதல் வாரத்தில் நடைபெற்ற சர்வதேச கலந்துரையாடல் குழு (IRG) அமர்வில் UNODC மூலம் எமது நாட்டுடன் தொடர்புடைய அறிக்கை சர்வதேச சமூகத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டது.

f. தற்போது எமது நாட்டுடன் தொடர்புடைய அறிக்கையானது எமது நாட்டுடன் தொடர்புடைய அறிக்கை UNODC இணையத்தளத்தில் பதிவிடப்பட்டுள்ளது.

g. இலங்கையானது மேற்படி சமவாயத்தில் ஏனைய நாடுகளால் மீளாய்வுக்குள்ளாகும் நடாக விளங்கியதுடன் இரண்டாவதுகலந்துரையாடல் அமர்வில் இலங்கை மற்றும் கினிகுடியரசு இரண்டும் இணைந்து இலங்கையின் சார்பில் சட்ட அலுவலர் ஒருவர் கலந்துரையாடல் நிபுணராக பங்குபற்றினார்.

## 05 UNODC அங்கீகாரம்

a. இந்த பிராந்தியத்தில் துரிதமாக முன்னேற்றம் கண்டு வரும் ஊழல் எதிர்ப்பு நிறுவனமாக இலஞ்ச ஊழல் ஆணைக்குழுவானது UNODC இனால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது.

b. அதனால் விஷேட நிபுணர்களின் சரவதேச மாநாட்டினை இலங்கையில் நடாத்த அவர்கள் தீர்மானித்து அதன்படி, 2018 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 25 ஆம் திகதி முதல் 27 ஆம் திகதி வரை கொழும்பில் நடைபெற்ற சர்வதேச நிபுணர் குழுவின் மாநாடு அதிமேதகு ஜனாதிபதி தலைமையில் நடைபெற்றது.

c. குறித்த நிகழ்வானது உலகின் பல பாகங்களிலிருந்தும் இலஞ்சம் மற்றும் ஊழல் நிவாரணம் தொடர்பான அமைப்புக்களின் நிபுணர்களின் பங்குபற்றலுடன் இலங்கையில் நடாத்தப்பட்டமை இலஞ்ச ஊழல் ஆணைக்குழுவிற்கும் நாட்டிற்கும் கிடைத்த பாரிய வெற்றியாகும்.

d. இந்நிகழ்விற்காக பூரண இணை ஒத்துழைப்பை இலஞ்ச ஊழல் ஆணைக்குழு வழங்குகின்றது.

## 06. தேசிய செயல் திட்டம்

a. ஊழலுக்கு எதிரான ஒரு தேசிய செயல் திட்டத்தை தயாரிக்காமை தொடர்பில் பல சர்வதேச அமைப்புக்கள் வினாத்தொடுத்துள்ளன.

b. இது தொடர்பில் UNODC ஐரோப்பிய ஒன்றியம் மற்றும் Open Government Partnership இவை கவனம் செலுத்துகின்றன.

c. UNCAC நிதியுதவியின் கீழ் ஒரு தேசிய செயல் திட்டத்தை உருவாக்கும் பணியில் உள்ளதாக UNODC கூறியுள்ளது.

d. GSP + I வரிச்சலுகையை வழங்குவதில் ஐரோப்பிய ஒன்றியமும் இது தொடர்பில் கவனம் செலுத்தியுள்ளது.

e. ஆதலினால், அமைச்சரவையினால் இலஞ்ச ஊழல் ஆணைக்கு ஊழலுக்கு எதிரான தேசிய செயல் திட்டத்தை தயார் செய்வதற்கான பொறுப்பு ஒப்படைக்கப்பட்டுள்ளது.

f. இச்செயற்பாடு ஜனாதிபதி செயலகம் மற்றும் ஏனைய அமைச்சுக்களின் ஒத்துழைப்புடன் முன்னெடுக்கப்படல் வேண்டும்.

g. இது தொடர்பில் பல்வேறு நடவடிக்கைகள் ஏற்கனவே முன்னெடுக்கப்பட்டுள்ளன. அவை வருமாறு

i. ஜனாதிபதியின் செயலாளர் தலைமையிலான ஆரம்ப கட்ட கலந்துரையாடல்கள்

ii. அனைத்து அமைச்சுக்களின் செயலாளர்கள் மற்றும் திணைக்களத் தலைவர்களும் வரவழைக்கப்பட்டு விளக்கமளிக்கப்பட்டனர்.

iii. ஊடக பிரதிநிதிகளின் சந்திப்பு மேற்கொள்ளப்பட்டதுடன் அவர்களின் ஆலோசனைகளும் பெற்றுக் கொள்ளப்பட்டன

iv. 2018 மே 15 ஆம் திகதி வரவு செலவுத்திட்ட பணிப்பாளரினால் செயல் திட்டத்திற்கு 16 மில்லியன் ஒதுக்கப்பட்டதுடன் USAID நிறுவனமும் உதவுகின்றது.

v. செயல் திட்டத்தை தயாரிப்பதற்கான ஆலோசகர்களில் உலக வங்கியின் ஓய்வு பெற்ற பிரதிநிதி மற்றும் உள்நாட்டு நிபுணர்கள் பலரும் தொடர்பிலுள்ளனர்.

vi. பாராளுமன்ற மேற்பார்வைக்குழுவில் நான்கு தடவைகள் தகவல்கள் பெறுதல் இடம்பெற்றதுடன் அதில் அமைச்சர்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள், உயர்மட்ட அதிகாரிகள் பலரும் கலந்து கொண்டனர். அவர்களின் பரிந்துரைகளும் முன்வைக்கப்பட்டன.

vii. மக்கள் கருத்துக்களை பெற்றுக் கொள்ளும் நோக்கில் முழுப்பக்க பத்திரிகை விளம்பரங்கள் மும்மொழிகளிலும் பிரசுரிக்கப்பட்டன.

viii. அமைச்சரவை மற்றும் ஜனாதிபதி செயலகத்தின் முழுமையான வழிகாட்டலின் கீழ், தேசிய செயல் திட்டமானது ஆணைக்குழுவினால் ஏனைய தொடர்புடைய நிறுவனங்களின் ஆலோசனை மற்றும் ஒத்துழைப்புடன் நாடளாவிய ரீதியில் 30 தகவல் திரட்டல் செயற்றிட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன. அவற்றில் அரச, தனியார் நிறுவனங்கள், சிவில் சமூக அமைப்புக்கள், ஊடக நிறுவனங்கள், கலைஞர்கள், இளைஞர்கள்

உள்ளிட்ட ஏராளமானோரின் ஆலோசனைகள் மற்றும் பரிந்துரைகள் பெறப்பட்டன.

ix. தற்போது வரைவாக தயாரிக்கப்பட்டுள்ள தேசிய செயல் திட்டமானது அவசியமான அனுமதிகளை பெற்றமையின் பின்பு 2018 டிசம்பர் மாதம் 09 ஆம் திகதி ஊழலுக்கு எதிரான சர்வதேச தினத்தில் வெளியிடுவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது.

## 07. திறந்த அரசுகளுக்கிடையிலான கூட்டு ஒப்பந்தம் (OPEN GOVERNMENT PARTNERSHIP)

a. திறந்த அரசுகளுக்கிடையிலான கூட்டு ஒப்பந்தத்தின் (Open Government Partnership) கீழ் தேசிய செயல் திட்டத்தினை உருவாக்கி நடைமுறைப்படுத்துவது தொடர்பில் இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களைப் புலனாய்வு செய்யும் ஆணைக்குழுவானது மகத்தான பணியை முன்னெடுத்து வருகின்றது.

## 08. GSP + வரிச்சலுகை

a. இலங்கைக்கு பெறுமளவு பொருளாதாரப் பெறுமதியுடைய GSP+ வரிச்சலுகையை நிலைத்திருக்கச் செய்வதில் வெளிநாட்டு அமைச்சினூடாக ஆணைக்குழுவிற்கு பாரிய பங்களிப்பினை வழங்கும் வாய்ப்பு கிட்டியது.

b. இவ்வரிச்சலுகையை ஐரோப்பிய ஒன்றியம் மீள வழங்குவதனை உறுதிப்படுத்துவதில் பிரதான குறிக்காட்டியாக விளங்கியது இலஞ்சம் மற்றும் ஊழலுக்கு எதிராக எடுக்கப்பட்ட நடவடிக்கைகளாகும்.

c. அதனடிப்படையில் கடந்த ஜுன் மாதத்தில் பெல்ஜியம் நாட்டின் பிரசல்ஸ் நகரில் நடைபெற்ற ஐரோப்பிய ஒன்றிய கூட்டத்தொடரில் இலஞ்ச ஊழல் ஆணைக்குழுவின் பணிப்பாளர் நாயகம் பங்குபற்றியதுடன் ஆணைக்குழுவினால் முன்னெடுக்கப்பட்ட நடவடிக்கைகள் தொடர்பிலான முன்வைப்பானது ஐரோப்பிய ஒன்றியத்தின் கவனயீர்ப்பை ஏற்படுத்தியது.

## 09. நிபுணத்துவ புலனாய்வாளர்களின் ஆட்சேர்ப்பு

a. ஆணைக்குழுவின் வரலாற்றில் இதுவரைக்காலமும் நிபுணத்துவ அலுவலர்கள் பணிக்கமர்த்தப்படவில்லை. இந்நிலையில் கணக்கியல், தணிக்கையியல், நிதி பகுப்பாய்வு, டிஜிட்டல் விசாரணைகள், பிணைமுறி பாதுகாப்பு, வங்கி, சர்வதேச சமவாயங்கள், பெறுகைகள், கட்டுமானம், பொறியியல், முகாமைத்துவம், அரச நிர்வாகம் மற்றும் பல்வேறு துறைகளுக்கும் என விஷேட நிபுணத்துவமிக்க 200 பணியாளர்களை உள்ளீர்ப்பதற்கான அனுமதியினை அரசு வழங்கியள்ளமை குறிப்பிடத்தக்கது.

b. இதனுடன் தொடர்புடைய வர்த்தமானி அறிவிப்பு 2018 ஆம் ஆண்டின் ஜுன் மாதம் முதல் வாரத்தில் வெளியிடப்பட்டது. விண்ணப்பங்கள் 2018 ஆகஸ்ட் மாதம் 01 ஆம் திகதி வரைக்கும் ஏற்றுக்கொள்ளப்பட்டது சுமார் 8000 இற்கும் அதிகமான விண்ணப்பங்கள் கிடைக்கப்பெற்றுள்ளன. நுண்மதி மற்றும் மொழி ஆற்றலைப் பரீட்சிப்பதற்கான போட்டிப்பரீட்சை பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் நடாத்தப்படும். பரீட்சை பெறுபேறுகளின் அடிப்படையில் நடைபெறவுள்ள நேர்முகப்பரீட்சையிலிருந்து முதல் குழுவினராக 50 பேர் இணைத்துக் கொள்ளப்படவுள்ளனர்.

## 10. தடுப்பு நிவாரண அலுவலர்களின் ஆட்சேர்ப்பு

a. அரசியலமைப்பிற்கு கொண்டுவரப்பட்ட 19 வது திருத்தத்தின் 156 வது பிரிவு மூலம் தடுப்பு நிவாரண அமைப்பு நிறுவப்பட வேண்டும் என்று கூறப்பட்டாலும், இதுவரைக்கும் நிறுவப்படவில்லை. எனவே, 50 தடுப்பு நிவாரண அதிகாரிகளை ஆட்சேர்ப்பு செய்வதன் மூலம் ஊழல் தடுப்பு நிவாரண பிரிவொன்றினை அமைப்பதற்கான அரசாங்கத்தின் அனுமதி பெறப்பட்டுள்ளது.

b. இலஞ்ச ஊழல் ஆணைக்குழுவின் விடயப்பரப்பிற்குறப்படாத தடுப்பு நிவாரண அலுவலர் பதவியை ஏற்ப்படுத்துவதற்கான ஆரம்ப கட்ட நடவடிக்கைளின் அடிப்படையில் 50 தடுப்பு நிவாரண அலுவலர்களை ஆட்சேர்ப்புச் செய்வதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளதுடன் சுமார் 5000 இற்கும் அதிகமான விண்ணப்பங்கள் கிடைக்கப்பெற்றுள்ளதுடன் ஆட்சேர்ப்பானது விரைவில் மேற்கொள்ளப்படும்.

## 11. சட்டத்தை திருத்துதல்

a. 1994 முதல் இலஞ்சம் மற்றும் ஊழல் சொத்துக்கள் பொறுப்புக்கள் தொடர்பான சட்டங்களுக்கான திருத்தங்கள் 1994 ஆண்டிலருந்தே இடம்பெறவில்லை. இந்த விடயத்தில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வின் பின்னர், பின்வரும் சட்டங்களை திருத்தும்படி ஜனாதிபதி மூலம் ஒரு பிரேரணை அமைச்சரவைக்கு சமர்ப்பிக்கப்பட்டது. அமைச்சரவையின் அனுமதியுடன் சம்பந்தப்பட்ட சட்டங்களை திருத்துவதற்கு அவசியமான அறிவுறுத்தல்கள் சட்டவரைஞருக்கு வழங்கப்பட்டுள்ளது.

b. அதில் மிகவும் அத்தியவசியமான திருத்தமொன்று 2018 ஆம் ஆண்டின் 22 ஆம் இலக்க இலஞ்ச (திருத்தச் சட்டம்) மேற்கொள்ளப்பட்டமையின் மூலம் இதுவரைக்காலமும் நீதிவான் நிதிமன்றத்தில் மாத்திரம் வழக்கிடப்பட முடியுமாக இருந்த ஊழல் குற்றம் தொடர்பில் மேல் நீதிமன்றில் வழக்கு தொடுக்கும் வாய்ப்பு கிடைக்கப்பெற்றமை குறிப்பிடத்தக்கது.

c. அவ்வகையில் இலஞ்ச சட்டம், சொத்துக்கள் பொறுப்புக்கள் சட்டம், இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களைப் புலனாய்வு செய்யும் ஆணைக்குழுச்சட்டம், ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழுச் சட்டம், முதலான சட்டங்களை திருத்துவதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன

d. அத்துடன் ஏனைய நிறுவனங்களுடன் இணைந்து நீதித்துறைச் சட்டத்திற்கு திருத்தம் மேற்கொள்ள ஆணைக்குழுவிற்கு முடியுமானது. அதனடிப்படையில் 3 நீதாய நீதிமன்ற நீதிபதிகளின் முன்னிலையில் பாரிய பொருளாதார இழப்பு தொடர்பான குற்றங்கள் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளும் வாய்ப்பு கிட்டியமை நாடென்ற வகையில் நாமடைந்த வெற்றியாகும்.

e. திருத்தத்திற்குள்ளாகும் சட்டங்கள் பின்வருமாறு அமையும்.

## I. இலஞ்ச சட்டம்

1. கீழ் காட்டப்பட்டுள்ள பிரச்சினைகள் தொடர்பில் பரிசீலனைக்குற்படுத்தப்பட்டது.
    - தனியார் துறை இலஞ்சம்
    - பரிசுப்பொருட்கள் தொடர்பான விதிகள்
    - உறவுகளுக்கு இடையிலான தொடர்பு பற்றிய விதிகள்
    - பணச்சலவை, சாட்சியாளர்கள் மற்றும் பாதிக்கப்பட்டவர்கள் தொடர்வில் குற்ற விசாரணை மேற்கொள்ளும் விதம்.
    - வெளிநாட்டு அரச அலுவலர்களுடன் தொடர்புடைய இலஞ்சம்

## II. ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழு சட்டம்

- ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழு சேகரித்த ஆதாரங்களைக் கருத்தில் கொள்வதற்கான அதிகாரம் இலஞ்ச ஊழல் ஆணைக்குழுவிற்கு இல்லை. எனவே, இலஞ்ச ஊழல் ஆணைக்குழு மீள அனைத்து சாட்சியங்களையும் பெறல் வேண்டும்.
- இலஞ்ச ஊழல் ஆணைக்குழுவிடம் இவ்வாறான 30 விசாரணைகள் காணப்படும் நிலையில் அத்தகைய சாட்சியங்களை மீள பதிவதற்கு பெருமளவு காலம் செலவாகும். எனவே இந்நிலைமையை மாற்றியமைத்து ஏனைய ஆணைக்குழுக்களின் விசாரணைகளை பயன்படுத்தும் விதத்தில் திருத்தத்தினை அமைச்சரவைக்கு சமர்ப்பித்து அனுமதி பெறப்பட்டுள்ளது.
- அது தற்பொழுது பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளதுடன் பாராளுமன்ற சட்டம் தொடர்பான குழுவின் மூலம் 2018.07.19 அனுமதி அளிக்கப்பட்டு இரண்டாவது வாசிப்பிற்காக தயார் நிலையில் உள்ளது.

## III. சொத்துக்கள் பொறுப்புக்கள் வெளிப்படுத்தல் சட்டம்

- எமது சொத்துக்கள் பொறுப்புக்கள் வெளிப்படுத்தல் சட்டத்தில் காணப்படும் குறைபாடுகள் தொடர்பில் கலந்துரையாடுவதற்காக உலக வங்கி, UNODC, ஸ்லோவேனியா மற்றும் இந்தோனேசியா முதலான நாடுகளிலிருந்து நிபுணர்கள் கொழும்பிற்கு வருகை தந்தனர்.
- அவர்களின் பரிந்துரைகள் தயாரிக்கப்பட்டுள்ளன.
- உலக வங்கியின் குழு, 2018 ஜூன் 17 முதல் 19 வரையான காலம்பகுதியில் இலங்கைக்கு விஜயம் மேற்கொண்டதுடன், இது தொடர்பில் விரிவாக கலந்துரையாடி உலகளாவிய சொத்துரிமை சட்டத்துடன் எமது சட்டத்தையும் புதுப்பிப்பதற்கான ஆலோசனைகளை வழங்கியதுடன் அது தொடர்பில் துறைசார் நிபுணர்கள் மற்றும் சட்ட வரைஞர்களின் உதவியுடன் வரைவொன்று தயாரிக்கப்பட்டுள்ளது. அத்துடன் தொலைத் தொடர்பு மற்றும் டிஜிட்டல் உட்கட்டமைப்ப அமைச்சு மற்றும் வெளியுறவு அமைச்சின் செயலாளருடன் பேச்சுவார்த்தைகளை நடாத்தி இணையவழி சொத்துக்கள் பொறுப்புகள் வெளிப்படுத்தலை வழங்குவதற்கான வசதிகளை ஏற்படுத்த திட்டமிட்டுள்ளனர். மேலும், குறித்த விண்ணப்ப படிவத்தில் மாற்றங்களை ஏற்படுத்தவும் முன்மொழிவுகள் மேற்கொள்ளப்பட்டது.

**முன்மொழியப்பட்ட சில திருத்தங்கள் பின்வருமாறு.**

- ✓ சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் வெளிப்படுத்துவோர் அளவை விரிவுபடுத்துதல்.
- ✓ சொத்துக்கள் மற்றும் பொறுப்புகள் வெளிப்படுத்தலில் விடயப்பரப்புக்களை உள்ளீர்த்தல்.
- ✓ வருடாந்த வெளிப்படுத்துகை காணப்படும் நிலையில், குறிப்பாக பாரியளவில் ஒரு நாளில் சொத்துக்கள் அதிகரிக்குமாயின் அதனை 15 நாட்களுக்குள் வெளிப்படுத்தல் வேண்டும். சொத்துக்களைப் பெறுவதற்கான உரிமையுடைய ஓய்வூதியதாரர்களின் சொத்துகள் மற்றும் பொறுப்புகள் ஓய்வூதியத்தின் பின் 2 வருடங்களுக்கு வெளிப்படுததுதல் வேண்டும்.
- ✓ சொத்துகள் பொறுப்புகளின் வெளிப்படுத்தல், பகுப்பாய்வு மற்றும் பின்தொடர்வுகளுக்கான ஒரு சிறப்பு நிறுவனத்தை நிறுவுதல். நடப்பு சொத்துகள் மற்றும் பொறுப்புகள் தொடர்பான குற்றங்களுக்கு தண்டனைகள் அதிகரித்தல்.

- இது தொடர்பில் பரிசீலனை செய்து தேவையான பரிந்துரைகளை முன்வைப்பதற்கு அமைச்சரவைக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

## IV. இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களைப் புலனாய்வு செய்யும் ஆணைக்குழுச்சட்டம்

- ஏனைய நிறுவனங்களுடன் இணைந்து விசாரணைகளை முன்னெடுத்தல்
- சட்டமா அதிபரின் ஆலோசனை பெறுவதற்கான அனுமதி
- தகவல் வழங்குவோர் தொடர்பான விதிகள்
- தடுப்பு நிவாரணம் தொடர்பான அதிகாரங்கள்

## 12. தடுப்பு நிவாரணம்

a. இலங்கையில், இலஞ்சம் மற்றும் ஊழலுக்கு எதிரான முறையான பொறிமுறை எதுவுமில்லை. ஹாங்காங், மலேசியா, பூட்டான் மற்றும் கொரியா முதுலானவற்றில் தடுப்பு நிவாரணத்திற்கு முன்னுரிமை அளிக்கப்பட்டுள்ளன. அவர்கள் விசாரணைகள் மற்றும் வழக்குகளில் பெரிதும் நம்பிக்கை கொள்ளவில்லை. விசாரணை மற்றும் வழக்கு தொடர்தலை விட ஆயிரமாயிரம் தடவைகள் தடுப்பு நிவாரணம் மேன்மையானதாகும் என்பதே அவர்களது நோக்கு.

b. எனினும், தடுப்பு நிவாரண முக்கியத்துவம் பற்றி இங்கு விழிப்புணர்வு உள்ளது. எனவே, இதன் மூலம் அரசாங்க திட்டங்களை வலுப்படுத்தவும், நேர்மைத்திறனை வலுப்படுத்தவும் எதிர்பார்க்கப்படுகிறது. இதை மனதில் கொண்டு, சமீபத்திய மாதங்களில் பின்வரும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

i. மலேசியாவின் நேர்மை திறன் ஆணைக்குழுவின் உயர்மட்ட அதிகாரிகளுடன் இலஞ்ச ஊழல் ஆணைக்குழு அதிகாரிகள் 3 சந்திப்புக்களை மேற்கொண்டனர்.

ii. ஜனாதிபதியின் செயலாளர் மற்றும் சட்டமா அதிபர், இலஞ்ச ஊழல் ஆணைக்குழு, ஆணையாளர், இலஞ்ச ஊழல் ஆணைக்குழு பணிப்பாளர் நாயகம், பொது நிர்வாகம் உள்நாட்டலுவல்கள் அமைச்சின் செயலாளர் ஆகியோர் பூட்டானிற்கு விஜயம் மேற்கொண்டு பூடான் பிரதமர், தலைமை நீதிபதி, சபாநாயகர் சட்டமா அதிபர் ஊழல் எதிர்ப்பு ஆணைக்குழு உறுப்பினர்கள் முதலானோரை சந்தித்த அனுபங்களை பெற்றுக் கொண்டதுடன் நேர்மைத்திறனை ஏற்ப்படுத்துவதற்கான கருத்துக்களை வரைவிற்குற்படுத்தினோம்.

iii. இலஞ்ச ஊழல் ஆணைக்குழுவின் பிரதிநிதிகள் மற்றும் சட்ட வரைவாளர்கள் ஆகியோர் ஹாங்காங் விஜயம் மேற்கொண்டு அங்கு ஊழல் எதிர்ப்பு நிறுவனங்கள மற்றும் அவர்களது பின்தொடர்தல் நடைமுறைகள் மற்றும் செயல்திட்டங்கள் தொடர்பில் அனுபவங்களை பெற்றுக் கொண்டனர்.

iv. மொரிஷியஸில் இருந்து சிறப்புப் பிரதிநிதிகள் இலங்கைக்கு வந்துள்ளதோடு தடுப்பு நிவாரண திட்டம் தொடர்பில் வழிப்படுத்தினர்.

## 13. தேசிய நேர்மைத்திறன் திட்டம்

அரச சேவையின் நேர்மைத் திறனை உயர்வடையச் செய்யும் நோக்கில் இலங்கைக்கான தேசிய நேர்மைத்திறன்மிக்க இணைந்த சட்டகமொன்றைத் தயாரிப்பதற்கான (National Integrity Plan) கொள்கைப்பத்திரம், செயற்றிட்ட வரைவு மற்றும் இலங்கையிலிருந்து இலஞ்சம் மற்றும் ஊழலை இல்லாதொழிப்பதற்கென ஏற்படுத்திய ஊழல் தடுப்பு நிவாரண செயற்றிட்டம் “விழிப்புணர்வினூடாக ஊழல் தடுப்பு நிவாரணம்” (Corruption Prevention Plan) எனும் இலக்கினை நோக்கி நகர்வதற்காக உத்தேசிக்கப்பட்ட முறைமைகளையுள்ளடக்கிய கொள்கைப்பத்திரம் அமைச்சரவைக்கு சமர்ப்பிப்பதற்காக ஜனாதிபதி செயலகத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

## 14. கல்வி

a. ஊழலை எதிர்கொள்ள, சமுதாயத்தின் மனப்பாங்கு மாற்றப்பட வேண்டும் என்ற உலக கருத்து எழுகிறது. இது சிறுவர்கள் மற்றும் பெரியவர்களை உள்ளடக்கி மேற்கொள்ளப்படல் வேண்டும்.

b இந்த மனப்பாங்கு மாற்ற அணுகுமுறையை மேம்படுத்த, பின்வருவனவற்றை பின்பற்றலாம்.

i. பாடசாலைகளில் ஊழலுக்கு எதிரான அணுகுமுறைகளை உள்ளடக்குவதற்கு கல்வி அதிகாரிகள் பல கலந்துரையாடல்களை நடத்தியுள்ளனர்.

ii. மாணவர்களுக்கான விழிப்புணர்வு திட்டங்களை நடாத்துதல்

iii. 50 க்கும் மேற்பட்ட விழிப்புணர்வு நிகழ்ச்சிகளுடன் நாடெங்கிலும் உள்ள பெரியவர்கள் பொது ஊழியர்கள், பொலிஸ் அதிகாரிகள் மற்றும் சிவில் சமுதாய உறுப்பினர்கள் என சகலருக்கும் விழிப்பூட்டல் நிகழ்வுகளை நடாத்ததல்.

iv. பொது விழிப்புணர்வை அதிகரிக்க ஊடக பிரச்சாரங்கள் இதுவரை முன்னெடுக்கப்படவில்லை. அத்தகைய நடவடிக்கை விரைவில் தொடரும்.

c. அரச அதிகாரிகள் “அறிமுக செயற்திட்டங்களில் ஊழல் தடுப்பு தொடர்பான நிகழ்ச்சிகள் மற்றும் விளக்கங்கள் ஆகியவற்றை உள்ளடக்கிய திட்டங்கள் உள்ளன.

## 15. பயிற்சிகள்

விசாரணைகள் மற்றும் வழக்குகளை வலுப்படுத்த உள்ளுர் மற்றும் வெளிநாட்டு பயிற்சி செயலமர்வுகள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன. இவை பின்வருமாறு.

a. ஊழலுக்கு எதிரான மலேசிய நிறுவனத்திற்கு (MACA) 45 புலனாய்வு மற்றும் சட்டத்துறை அலுவலர்கள் பயிற்சிக்காக சென்றனர்.

b. பயிற்சியின் நிமித்தம் சிங்கப்பூர், கொரியா மற்றும் சீனாவுக்கு அதிகாரிகள் அனுப்பப்பட்டனர்.

c. ஹாங்காங்கில் ஊழல் எதிர்ப்பு ஆணையத்திற்கு உயர்மட்ட அரச அதிகாரிகள், புலனாய்வு அலுவலர்கள் மற்றும் சட்ட அலுவலர்களை அனுப்ப முன்மொழியப்பட்டுள்ளது. ஆணைக்குழு இதனை ஒப்புக் கொண்டுள்ளது.

d. UNDOC, நீதி அமைச்சு மற்றும் சட்டமா அதிபர் திணைக்கள உதவியின் கீழ் பல உள்ளுர் நிகழ்ச்சித் திட்டங்கள் நடத்தப்பட்டது.

e. அலுவலர்களின் கடமைகளின் செயல்திறனை மேம்படுத்த ஒரு குறிப்பு புத்தகம் மற்றும் சட்ட விதிமுறைகளுக்கு ஒரு வழிகாட்டி நூல் தயார் செய்யப்படுகிறது.

## 17. இணையத்தளத்தை ஸ்தாபித்தல்

a. நீண்டகாலமாக எதிர்பார்க்கப்பட்ட இணையத்தளம் டிசம்பர் 2017 இல் தொடங்கப்பட்டது. ஆணைக்குழுவின் சமகால நிகழ்வுகள், வழக்கு, மற்றும் முடிவுக்கு கொண்டுவரப்பட்ட வழக்குகள் பற்றி விழிப்புணர்வை ஏற்படுத்தவும் பல்வேறு தகவல்களை வழங்கவும் இது பொது மக்களுக்கு உதவுகின்றது.

b. இருப்பினும், தற்போதுள்ள விசாரணைகளின் இரகசியத்தன்மை உரிய விதத்தில் பாதுகாக்கப்படுகிறது.

c. இலங்கையின் சுமார் 1000 அரசாங்க இணையத்தளங்களில் இலஞ்ச ஊழல் ஆணைக்குழுவின் இணையத்தளத்திற்கு சிறப்பு விருதானது Bestweb.lk அமைப்பினால் வழங்கி வைக்கப்பட்டது. மிகக்குறுகிய காலத்தில் அதாவது 06 மாதத்தில் இதனை அடையும் வாய்ப்பு ஆணைக்குழுவின் இணையத்தளத்திற்கு கிடைத்தது. எங்கள் வலைத்தளத்தில் மக்கள் ஈர்க்கும் வகையிலான பல வாய்ப்புக்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன பார்வை குறைபாடுகள் கொண்ட நபர்களுக்கு அணுகுவதற்கு Audio வடிவமைக்கப்பட்டுள்ளது மற்றும் இது ஆணைக்குழுவிற்கு சமர்ப்பிக்கும் குற்றச்சாட்டுகளுக்கு புகார் செய்ய 08 முறைகளை அறிமுகப்படுத்தி பொது மக்களுடன் நெருக்கமாக பணியாற்றி வருகிறது.

## C. சவால்கள்

இலஞ்சம் மற்றும் ஊழல் பற்றிய சார்த்துதல்களை விசாரிப்பதற்கான ஆணைக்குழு இலங்கையில் ஊழல் எதிர்ப்புத் திட்டங்களை பலப்படுத்த பல சவால்களை எதிர்கொண்டது. இவை பின்வருமாறு.

### 01. அலுவலக இடம் மற்றும் பிற வசதிகள் இல்லாமை

a. இலஞ்சம் மற்றும் ஊழல் பற்றிய சார்த்துதல்களை விசாரிப்பதற்கான ஆணைக்குழு மிகப்பெரிய சவால் அலுவலக வசதிகளின் பற்றாக்குறை மற்றும் அதன் பணிகளுக்கான தொழில் சார் நிபுனத்துவ பற்றாக்குறை.

b. இலஞ்ச ஊழல் ஆணைக்குழுவில் தற்போது சுமார் 200 புலனாய்வாளர்களின் பற்றாக்குறை உள்ளது. இது ஒரு ஆரம்ப விசாரணை பிரிவு மற்றும் தடுப்பு நிவாரண பிரிவு, டிஜிட்டல் பிரிவு, புலனாய்வு பிரிவு, பாதுகாப்பு பிரிவு மற்றும் சாட்சிகளின் பாதுகாப்பிற்காக ஒரு பிரிவு முதலானவற்றை நிறுவ திட்டமிட்டுள்ளது. இந்த நடவடிக்கைகள் அனைத்தையும் செய்வதற்காக, இலஞ்ச ஊழல் ஆணைக்குழுவிற்கு போதிய இடம் தேவை.

c. இந்த நிலைமை தற்போதைய கட்டட இடிபாடு (பாவிப்பு தடை) காரணமாக தீவிரமானது. அரச பொறியியலாளர்கள் எச்சரிக்கை செய்து குறித்த கட்டத்தில் இருந்து சுமார் 75 பேர் வெளியேறி கெப்படிபொல மாவத்தையில் உள்ள முன்னைய ஆட்பதிவு அலுவலகத்தில் தமது பணிகளை முன்னெடுக்கின்றனர்.

d. புதிய அரசாங்கம் 2015 ல் அதிகாரத்திற்கு வந்த போது பிரதமர் இலஞ்ச ஊழல் ஆணைக்குழுவிற்கு உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொண்டு அருகிலுள்ள சிறைச்சாலைத்திணைக்களத்துக்கு சொந்தமான நிலத்தை ஆணைக்குழுவிற்கு பெற்றுத்தருவதாகவும் புதிய கட்டிடம் அமைக்கவும் அனுமதி தருவதாகவும் கூறினார். அமைச்சரவை தீர்மானத்தின் மூலம் இலஞ்ச ஆணைக்குழுவிற்கு அது வழங்கப்பட்டுள்ளது.

e. UDA பல சந்தர்ப்பங்களிலும் தடையாய் அமைந்த நிலையிலும் இறுதியாக 08 மாடிக்கட்டடததை நிரமானிப்பதற்கு அனுமதி வழங்கியுள்ளது. அது போதியதாக இல்லாவிடினும் ஆணைக்குழு பெற்ற வெற்றியாகும். எனினும் ஆணைக்குழுவிற்குள்ள பிரதான சவாலாக அமைவது திறைசேறியிலிருந்து துரிதமாக பணம் ஒதுக்கீடு செய்து கட்டுமானப்பணிகளை முன்னெடுப்பதாகும்.

## 02. சட்ட அலுவலர்களினதும் விசாரணை அலுவலர்களினதும் குறைந்த சம்பளம்

a. வழக்கு தொடுக்கும் சட்ட அலுவலர்களின் சம்பளம் குறைந்த மட்டத்தில் காணப்படுவதினால் அவர்களின் நீடித்த சேவையை பெறமுடியாதுள்ளது.

b. சட்ட அலுவலர்களை இணைத்துக் கொள்வதிலும், ஏலவே இணைத்துக் கொள்ளப்பட்டவர்களின் நீடித்த சேவையை பெறுவதிலும் பல்வேறு சவால்களை எதிர்நோக்க வேண்டியுயள்ளது காரணம் குறைந்த சம்பளமும் எதிரகால எதிர்பார்ப்புக்களுமாகும். இந்துனேசியா முதலான நாடுகளில் ஊழலுக்கு எதிரான ஆணைக்குழுக்களின் சட்டவாளர்களின் சம்பளம் சட்டத்திணைக்கள சட்ட அலுவலர்களின் சம்பளத்தை விட அதிகமாகும்.

c. ஆதலினால் அண்மையில் சட்டமா அதிபர் திணைக்களத்தின் சம்பள அதிகரிப்பு ஏற்படுத்தப்பட்டது. இதன் காரணமாக அரசாங்க சட்டத்தரணிகளாக ஈடுபட எதிர்பார்க்கும் அளவு அதிகரித்துள்ளது. ஆனால் முன்பு சட்ட மா அதிபர் திணைக்களத்தில் அத்தகைய நிலைமை இருக்கவில்லை. எனவே, ஆணைக்குழுவின் சட்ட அலுவலர்கள், புலனாய்வு அதிகாரிகளின் சம்பளங்கள் அதிகரிக்கப்பட வேண்டும். இது தொடர்பில் ஜனாதிபதி செயலகத்தினூடாக சம்பளங்கள் மற்றும் ஆளணி ஆணைக்குழுவிற்கு பிரேரணையொன்று சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

d. இலஞ்ச ஊழல் ஆணைக்குழுவின் உத்தியோகத்தர்களுக்கு 25% கொடுப்பனவு வழங்கப்படுவதுடன் அது, 2015 ஆம் ஆண்டின் சம்பளத்தில் கணக்கிடப்படும். பல அரசுத் திணைக்களங்கள் பணமீட்டும் நிறுவனங்கள் என பெயரிடப்பட்டுள்ளன. இதில் பணிபுரிபவர்களுக்கு கூடுதல் வாய்ப்புக்கள் வழங்கப்படும். ஊழல் ஆணைக்குழுவினை 75% கொடுப்பனவில் சேர்க்காமை பெரிய இழப்பாகும். இது அவர்களுக்கு ஏலவே வழங்கப்பட்ட கொடுப்பனவாகும்.

e. இதற்கு முன்பு சட்டமா அதிபர் திணைக்களம் மற்றும் இலஞ்ச ஊழல் ஆணைக்குழுவின் உத்தியோகத்தர்களின் சம்பளங்கள் தொடர்பான அமைச்சரவை உப குழுவொன்று ( கௌரவ திலக் மாரப்பன அவர்களின் தலைமையில்) நியமிக்கப்பட்டதுடன் இலஞ்ச ஊழல் ஆணைக்குழுவின் உத்தியோகத்தர்களின் சம்பளங்களை அதிகரிப்பதற்கான பரிந்துரை மேற்கொள்ளப்பட்டிருந்தது.

f. எவ்வாறாயினும் சம்பளங்கள் மற்றும் ஆளணி ஆணைக்குழு அதற்கான அனுமதியை இதுவரையும் வழங்கவில்லை.

## 03. ஊழியர்களின் பற்றாக்குறை

a. ஹொங்கொங்கில் 6 மில்லியன் மக்கள் தொகை உள்ளது, ஆனால் ஊழல் விசாரணைப் பிரிவில் சுமார் 1,000 க்கும் அதிகமான புலனாய்வாளர்கள் உள்ளனர். மலேசியாவிலும் இதே நிலைமையே காணப்படுகின்றது.

b. இலங்கையின் மக்கள்தொகை 21 மில்லியனாக உள்ள போதிலும், ஆணைக்குழுவில் 200 விசாரணை அலுவலர்களும் 28 சட்ட அலுவலர்களுமே பணிபுரிகினறனர். இது மிகவும் பற்றாக்குகறையான நிலைமையாகும்.

## 04. பயிற்சிகள் மற்றும் சிறப்பு நிபுனத்துவ சேவைகளுக்கு போதிய நிதியொதுக்கப்படாமை

a. குறைந்த சம்பளம் காரணமாக திறமையான மற்றும் நிபுணத்துவமிகு சட்டத்தரணிகளை உள்ளீர்ப்பதும், அவ்வாறனவர்களின் நீடித்த சேவையை பெற்றுக் கொள்வதும் சவால் மிகுந்த ஒன்றாகியுள்ளதுடன் அலுவலக வசதிகளின் பற்றாக்குறை மற்றும் அதன் பணிகளுக்கான தொழில் சார் நிபுணத்துவ பற்றாக்குறை. பௌதீக வள மற்றும் உட்கட்டமைப்பு வசதிகளின் பற்றாக்குறை முதலான குறைபாடுகள் நிலவுகின்றமை. குறிப்பாக சிறந்த முறையில் விசாரணைகளை முன்னெடுக்கவும், வழக்கு நடவடிக்கைளை தொடர்வதற்கும் தேவையான நிபுணத்துவ விசாரணையாளர்கள், சட்ட அலுவலர்கள் அவசியம். துறைசார் நிபுணத்துவமற்ற குறுகிய அறிவுடைய சாதாரண விசாரணையாளர்களாலேயே விசாரணைகள் முன்னெடுக்கப்படுகின்றன. இதனால் பெரும் புள்ளிகளான குற்றவாளிகள் அவர்களின் திட்டமிடல் சாணக்கியம் காரணமாக தப்பித்துக் கொள்கின்றார்கள், இந்நிலைமை மாறல் வேண்டும். அலுவலர்களுக்கான போதிய பயிற்சிகள் வழங்கப்படுதல் வேண்டும். தொடர்ந்தும் ஆணைக்குழுவின் அலுவலர்கள் சர்வதேச அனுபமிகுந்த, விஷேட நிபுணத்துவமிக்க உள்ளூர் மற்றும் வெளிநாட்டு நிறுவனங்களின் தேர்ச்சி பெற்றவர்களினால் தொடர்ந்தும் அறிவூட்டல்கள், பயிற்சிகள், வழிகாட்டல்கள் முதலானவற்றுக்கு உட்படுத்தப்படல் வேண்டும். அதற்கான நிதி ஒதுக்கீடுகள் போதாமை காரணமாக தொடராக முன்னெடுப்பதில் தடைகள் ஏற்படுகின்றன.

b. விசாரணைகள் மற்றும் வழக்கு நடவடிக்கைகள் மேற்கொள்வதை பலப்படுத்தும் அதே சந்தரப்பத்தில் பயனுடைய தடுப்பு நிவாரண நடவடிக்கைகளையும் முன்னெடுத்தல் வேண்டும். நாட்டினுள் எல்லா துறைகளையும் உள்ளடக்கியதான வெற்றிகரமான நிவாரண நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படல் வேண்டும். அதற்கு அறிவு மற்றும் திறமைகளுடன் கூடிய பயிற்றுவிப்பாளர்கள் அவசியம். புதிதாக இணைத்துக் கொள்ளப்படவுள்ள தடுப்பு நிவாரண அலுலர்கள் மற்றும் அரச உயர்மட்ட அலுவலர்கள் அனைவரினையும் பயிற்றுவிப்பது இன்றியமையாததாகும்.

**05. இலத்திரனியல் மற்றும் டிஜிட்டல் தொழில் நுட்பங்களைப் பயன்படுத்துவதற்கான வாய்ப்புக்கள் இன்மை.**

a. சட்டங்கள் மற்றும் தண்டனையை அமுல்படுத்துவதுடன் மாத்திரம் நின்றுவிடாது ஊழலற்ற தேசத்தை உருவாக்குவதற்கான சூழல் மற்றும் மனப்பாங்கு மாற்றத்தை ஏற்படுத்தும் நிவாரண செயற்றிட்டங்களினை முன்னெடுப்பதற்கு அரசு காத்திரமான நடவடிக்கைகளை முன்னெடுத்தல் வேண்டும்.

b. இவ்வுயரிய இலக்கினை அடைவதற்காக ஊழலுக்கு எதிரான கலாசாரத்தை இலங்கையினுள் ஏற்படுத்துவதற்கும் இலஞ்சம் மற்றும் ஊழலை சமுதாயத்திலிருந்து ஒழிப்பதற்கும் சமூகத்தை விழிப்பூட்டல், இலஞ்சம் மற்றும் ஊழலுக்கு எதிரான ஊடக கலாசாரத்தை ஏற்படுத்தல அச்சு இலத்திரனியல் ஊடகங்களை பயன்படுத்துதல், விளம்பரங்கள், சுவரொட்டிகள்,கேலிச்சித்திரங்கள், வீதி நாடகங்கள், குறும்படத்தயாரிப்புக்கள், பதாதைகள் முதலான பல்வேறு செல்வழிகளினூடே மனப்பாங்கு மாற்றத்தை ஏற்படுத்தும் நடவடிக்கையினூடாக சிறந்த சமுதாயத்தை உருவாக்குதல் வேண்டும். இதற்கு அரச, தனியார் துறையின் ஒத்துழைப்பு மிகவும் அவசியமாகும்.

c. திறந்த அரசுகளுக்கிடையிலான கூட்டு ஒப்பந்த (Open Government Partnership) மாநாட்டில் ஜனாதிபதி அவர்கள் ஊழலற்ற தேசத்தை உருவாக்குவதற்கு இலத்திரனியல் ஊடகங்களின் பங்கு மிகவும் அவசியமானதொன்று என்பதாக சர்வதேசத்திற்கு அறைகூவல் விடுத்தார்.

d. அவ்வகையில் நிதியமைச்சின் கீழுள்ள நிறுவனங்களில் ஒன்றான செலசீன் நிறுவனத்தின் உதவியை பெற்றுக் கொள்வதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளதுடன் அதற்கு ரூபா 540 மில்லியன்கள் ஒதுக்கப்படல் வேண்டும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

## 6. பொதுமக்களின் சாதாரண நிலைப்பாடு

a. பொதுமக்களின் பொதுவான நிலைப்பாடாக இருப்பது இலஞ்சம் மற்றும் ஊழல் பற்றிய சார்த்துதல்களைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழுவிற்கு பெரும் பொறுப்பாக விளங்குவது இலஞ்ச ஊழலுடன் தொடர்புடையோரை கைது செய்து அவருக்கு எதிராக வழக்கு தொடர்தலேயாகும். குற்றஞ்சாட்டப்பட்டவர்களுக்கு எதிராக போதியளவான சாட்சிகளிருப்பின் மாத்திரமே கைது செய்து அவர்களுக்கெதிராக வழக்கு தொடுக்கப்படும். இது தொடர்பில் பொதுமக்களிடத்தில் போதிய அறிவின்மை காணப்படுவதானது ஆணைக்குழு எதிர் கொள்ளும் பெரிய சவாலாகும். தற்போதைய நிலையில் ஆணைக்குழுவானது துரிதமாக மாற்றங்களுடன் பயணிக்கும் நிலைக்கு வந்திருப்பது கடந்த 25 வருடங்களுக்குப்பின் உறுதியான அடித்தளத்தையும் கொள்கையையுமுடையதாய் எதிர்காலத்தில் ஆணைக்குழுவினை பலமிக்கதாக மாற்றுவதனூடாக ஊழலுக்கான வாய்ப்புக்கள் குறைந்ததும், ஊழலற்றதுமான தேசத்தினை உருவாக்கும் நோக்கிலாகும்.

**இணைப்பு : 01**

## இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களை புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழு

**2018 ஜனவரி 01 ஆம் திகதி முதல் செப்டம்பர் 30 ஆம் திகதி வரையிலான முன்னேற்றம்**

**2018.09.30 ஆம் திகதியளவில் நீதிமன்றங்களில் தொடுக்கப்பட்ட மொத்த வழக்குகளின் எண்ணிக்கை - 32**

### ➢ நீதிவான் நீதிமன்றம்

| இலஞ்சம் | ஊழல் | சொத்துக்கள் / பொறுப்புக்கள் வெளிப்படுத்தாமை | மொத்தம் |
|---|---|---|---|
| 04 | 02 | 07 | 13 |

**குற்றம் சுமத்தப்பட்டவர்கள் -**

- முன்னாள் சட்டமா அதிபர்
- மின்சார மற்றும் சக்தி வள அமைச்சின் முன்னால் செயலாளர்
- முன்னாள் பிரதேச சபை உறுப்பினர்கள் (02 வழக்குகள்)
- பொலிஸ் கான்ஸ்டபில்
- மேல் நீதிமன்ற நீதிபதி
- முன்னாள் நகர முதல்வர்
- லக்சல தலைவர்
- கிராம சேவகர்
- பொலிஸ் பாதுகாப்பு அலுவலர்
- அலுவலக உதவியாளர்

### ➢ மேல் நீதிமன்றம்

| இலஞ்சம் | முறையற்ற விதத்தில் சொத்து சேகரித்தல் | மொத்தம் |
|---|---|---|
| 19 | - | 19 |

**குற்றம் சுமத்தப்பட்டவர்கள் -**

- முன்னாள் அமைச்சர்கள்
- பொது சுகாதார பரிசோதகர்
- சுகாதார உதவி அலுவலர்
- களஞ்சிய காப்பாளர்
- வீதி அபிவிருத்தி அதிகார சபையின் தொழில் நுட்ப அலுவலர்
- வட்டார வன அலுவலர்
- இராணுவ சிப்பாய்
- மின்சார அலுவலர்
- இராணுவ பிரிகேடியர்
- கிராம சேவகர்
- உதவி விற்பனை முகாமையாளர்
- பிரஜைகள்
- பொலிஸ் கான்ஸ்டபில்
- அதிபர்
- அலுவலக உதவியாளர்
- மின்னியலாளர்
- தொழில் அலுவலர்

## 02. 2018.09.30 திகதியில் மேற்கொள்ளப்பட்ட வெற்றிகர இலஞ்ச சுற்றிவளைப்புக்கள் 29

- அந்த சுற்றிவளைப்புக்களின் போது கைதுசெய்யப்பட்ட சந்தேக நபர்களின் எண்ணிக்கை- 32

- **சந்தேக நபர்கள் :**

  - ஜனாதிபதியின் அலுவலக பிரதானி
  - தலைவர் (அரச மரக் கூட்டுத்தாபனம்)
  - பொதுமக்கள் (2)
  - விவசாய உத்தியோகத்தர்
  - உதவி பொலிஸ் அத்தியட்சகர்
  - உப பொலிஸ் பரிசோதகர் (02)
  - உதவி சட்ட அலுவலர்
  - திட்டமிடல் அலுவலர்
  - பொலிஸ் கான்ஸ்டபில் (03)
  - சிரேஷ்ட மதிப்பீட்டாளர்
  - சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்
  - பொலிஸ் சார்ஜன்ட் (05)
  - தனியார் பஸ் நேரக்கணிப்பாளர்
  - வட்டார வன அலுவலர்
  - கைத்தொழில் நிர்வாகி
  - உப பொலிஸ் பரிசோதகர்
  - விலைசுட்டி குழு உறுப்பினர்
  - மின்சார அலுவலர்
  - மதுவரி அலுவலர்
  - அலுவலக உதவியாளர்
  - தனியார் பஸ்நிலைய பொறுப்பதிகாரி
  - தொழில் அலுவலர்
  - சிரேஷ்ட தொழில் அலுவலர்

## 04. 2018.09.30 ஆம் திகதியளவில் நீதிமன்றால் நிறைவு செய்யப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை - 92

- **நீதிவான் நீதிமன்றம் - 19**

| | இலஞ்சம் | ஊழல் | சொத்துக்கள் /பொறுப்புக்கள் வெளியிடாமை | **மொத்தம்** |
|---|---|---|---|---|
| குற்றவாளி | 03 | 01 | 13 | **17** |
| சுற்றவாளி | 01 | - | - | **01** |

❖ **மேல் நீதிமன்றம் - 73**

| | இலஞ்சம் | முறையற்ற விதத்தில் சொத்து சேகரிப்பு | மொத்தம் |
|---|---|---|---|
| **குற்றவாளி** | 39 | 02 | **41** |
| **சுற்றவாளி** | 28 | 01 | **29** |
| **வேறு*** | 04 | - | **04** |

வேறு* : குற்றவாளி / முறைப்பாட்டாளர் இறப்பெய்தியமை மற்றும் வழக்கை மீளப்பெற்றுக் கொண்டமை

## இணைப்பு: 02

### 01. கடந்த வருடங்களில் நீதிமன்றங்களினால் குற்றவாளிகளாக்கப்பட்டோர் விபரம்

| வருடம் | தாக்கல் செய்யப்பட்ட மொத்த வழக்குகள் | நிறைவடைந்த வழக்குகளின் எண்ணிக்கை | குற்றவாளிகளாக்கப் பட்டோரின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| 2005 | 98 | 12 | 05 |
| 2006 | 110 | 20 | 07 |
| 2007 | 91 | 33 | 12 |
| 2008 | 63 | 20 | 14 |
| 2009 | 43 | 56 | 24 |
| 2010 | 67 | 38 | 17 |
| 2011 | 34 | 40 | 20 |
| 2012 | 77 | 60 | 33 |
| 2013 | 58 | 55 | 17 |
| 2014 | 64 | 58 | 22 |
| 2015 | 108 | 52 | 15 |
| 2016 | 87 | 34 | 15 |
| 2017 | 73 | 89 | 57 |
| 2018.09.30 | 35 | 92 | 59 |

### கடந்த வருடங்களில் நீதிமன்றங்களினால் குற்றவாளிகளாக்கப்பட்டோர் விபரம்

